1974 மார்ச் 26]

(ஆ) நிலக்கரிப் பற்றுக்குறையும், சிமெண்ட் உற்பத்தி பாதிப்பும் குறித்து.

THIRU G. R. EDMUND : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the adverse effect on the production of cement in this State due to shortage of coal and steps to be taken in this matter.

திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் : தலைவர் அவர்களே, நிலக்கரி பற்றுக்குறை காரணமாக திருச்சி மாவட்டம், டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலையில் ஏற்கனவே ஒரு யூனிட் மூடப்பட்டு மற்ற இரண்டு யூனிட்டுகளும் மூடப்படும் தறுவாயில் இருப்பதால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்கும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான தீர்மானத்தை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் உள்ள சிமிட்டி ஆலைகளில் கடுமையான நிலக்கரிப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. நிலக்கரியும் உலை எண்ணெயும் கிடைக்காமையால் சிமிட்டி ஆலைகளில் உற்பத்தி கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. இம் மாநிலத்தில் 7 சிமிட்டி ஆலைகளுக்கு மாதந்தோறும் 84,900 டன் நிலக்கரி தேவைப்படுகையில் 1973 அக்டோபரிலிருந்து 1974 பிப்ரவரி வரை அவற்றுக்கு மொத்தம் 2,29,612 டன் நிலக்கரி மட்டுமே கிடைத்துள்ளது. இவ்வரசு இதுகுறித்து இந்திய அரசுடன் கலந்தாலோசித்து வருகிறது. இத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை, இதனால் சிமிட்டி ஆலைகள் மூடப்படும் நிலை, அதன் விளைவாகப் பெருமளவில் வேலை வாய்ப்பின்மை ஏற்படுதல், மற்றும் தமிழ்நாட்டிலும், சிமிட்டிக்கு இம் மாநிலத்தை நம்பியிருக்கும் பிற மாநிலங்களிலும் பெரும் வளர்ச்சித் திட்டங்கள் முடக்கமடைவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் இவை குறித்து இந்திய அரசுக்கு விளக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சிமிட்டி ஆலைகளுக்குப் போதிய நிலக்கரி கிடைக்கச் செய்வதற்கும், நிலக்கரியை எடுத்துச் செல்வதற்குப் போதிய ரயில் சரக்கு வண்டிகள் கிடைக்கச் செய்யவும், நிலக்கரி குறைவாக வழங்கப்படும் நிலையில் உலை எண்ணெய் வழங்கப் படுவதற்கு ஏற்பாடு செய்யவும், தொழிற்சாலைகள் ஆதாயம் தரும்

வகையில் செயல்பட வேண்டுமானுல் அவை உலை எண்ணெயைப் பயன்படுத்த வேண்டியபோது அவற்றிற்கு ஏற்படும் கூடுதல் செலவுகளை ஈடு செய்யவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

2. இந்திய அரசு, தமிழ்நாட்டிலுள்ள சிமிட்டி ஆலைகளுக்கு நிலக்கரி வழங்கப்படும் நிலை குறித்துத் தவருமல் விழிப்புடன் கவனித்து வருவதாக இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது. தென்னிந்தியாவில் உள்ள சிமிட்டி ஆலைகளுக்கு ராணிகஞ்ச் நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 100 வாகன் நிலக்கரி அனுப்புவதாக இந்திய அரசு உறுதியளித்துள்ளது. இது பற்றி இவ்வரசு தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறது.

(4) 1973–74-ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை—அளித்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, 1973–74-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 53.91 கோடி ரூபாயாகும். இதில் 35.15 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கைச் சேர்ந்ததாகும். எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சேர்ந்ததாகும். மொத்த மானியக் கோரிக்கையில், 53.54 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின்கீழும், 37 இலட்சம் ரூபாய் சாட்டிய இனங்களின் கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செலவினங்கள் சிலவற்றை இப்போது குறிப்பிட விழைகிறேன்.

நடப்பு ஆண்டில் இருந்து அரசு அலுவலாளர்களின் சம்பளம் அந்தந்தத் திங்களின் கடைசி வேலை நாளிலேயே கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பாக, ஒரு வரையறைக்குட்பட்ட ஊதியம் வாங்கும் அலுவலாளர்கட்கு மார்ச் திங்களுக்கான ஊதியம் 1974 எப்ரல் 1 ஆம் தேதிக்கு மாருக, மார்ச் 30 ஆம் தேதியிலேயே கிடைக்கும். ஆகவே, 1973–74-ஆம்